## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.472/2010

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 20 |
| Name | : ஷபிக் ரகுமான் |
| Father's Name | : ஷேக் தாவுத் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2022.

**முதல் விசாரணை.**

நான் தற்போது சென்னை தேனாம்பேட்டையில் பில்டிங் கான்ட்ராக்டராக இருந்து வருகிறேன். இதற்கு முன்னர் பாலிடாக்ஸ் மெடிக்கல் பேமிலி கிளினிக்கில் கஸ்டமர் குவாடினேட்டராக 2004 லிருந்து 2009 வரை இராயப்பேட்டையில் வேலை பார்த்து வந்தேன். இந்த பாலிடாக்ஸ் மெடிக்கல் குரூப்பானது 2008 வரை இராயப்பேட்டையிலும் அதன் பின்னர் டி.நகருக்கு மாற்றலானது. மாற்றலாகும் போது நான் அதில் வேலை பார்த்து வந்தேன். அங்கு 1 வருடம் பணிபுரிந்து வந்து பின்னர் அங்கிருந்து வெளியில் வந்துவிட்டேன். பொதுவாக ஏஜெண்ட்டுகள், லைசன்ஸ் ஹோல்டர் மற்றும் லைசன்ஸ் இல்லாதவர்கள் இந்த சென்டருக்கு வந்து வெளிநாடு செல்வதற்காக ஸ்கீரினிங் டெஸ்ட் எடுப்பதற்காக வருவதுண்டு. அதன்படி எங்களுடைய பாலிடாக்ஸ் மெடிக்கல் சென்டரானது மலேசியா நாட்டின் அங்கீகாரம் பெற்றது. இதே போன்று மற்ற நாட்டிற்கும் நாங்கள் பார்மாலிட்டி ஸ்கிரினிங் டெஸ்ட் செய்து தருவதுண்டு. அதன்படி ஆஜர் எதிரி பிரின்ஸ் டயகிரஸ்சி சென்டர் என்ற இடத்தில் வேலை பார்த்தவர் 2005 ம் ஆண்டிலிருந்து எங்கள் சென்டருக்கு வருவதுண்டு. அவர் ஆட்களை கொண்டு வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவதற்காக ஆட்களை ஸ்கிரினிங் டெஸ்டிற்கு அழைத்து வருவார். நாங்கள் பொதுவாக ரூ.500/- லிருந்து

ரூ.3000/- வரை கட்டணம் வசூலிப்பதுண்டு. அன்றைய தினம் மாலையில் ஸ்கிரினிங் டெஸ்டிற்கான ரிப்போர்ட்டை வாங்கி செல்வதுண்டு. அதே போன்று ஆஜர் எதிரியும் வாங்கி சென்றார். ஆஜர் எதிரி மலேசியா செல்லும் நபர்களையும், மற்ற நாடுகளுக்கு செல்லும் நபர்களையும் அழைத்து வந்துள்ளார். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி போன்று வேறு சிலரும் எங்கள் சென்டருக்கு வருவதுண்டு. மேலும் அவர் லிங்கம் டிரேடர்ஸ் மற்றும் விண்டோ ஓவர்சீஸ் என்ற பெயர் கொண்ட சென்டரையும் அவர் தனியாக வைத்திருந்தது குறித்து எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் யார் யாருக்கு ஸ்கிரினிங் டெஸ்ட் எடுத்தேன் என்ற விவரம் தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் சென்டருக்கு யார் யாரை அழைத்து வந்தார் என்ற விவரத்தை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை. பொதுவாக எங்கள் சென்டருக்கு 60 நபர்கள் முதல் 400 நபர்கள் வரை வருவார்கள். நிறைய நபர்கள் வருவதால் பெயர்கள் ஞாபகம் வைத்திருக்க முடியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி யாரையும் எங்கள் பரிசோதனை மையத்திற்கு அழைத்து வரவுமில்லை. அவர் அழைத்து வந்த நபர்களை நாங்கள் பரிசோதிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை.

Sd. xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.